# பிரித்தானிய மலாயாவில் யாழ்ப்பாணத்தவரின் அரசியல் நடவடிக்கைகள்

ச. சத்தியசீலன்

பொருளாதார நோக்கம் கருதி மலாயாவிற்குக் குடிபெயர்ந்த யாழ்ப்பாணத்தவர் அரசியல் நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் காட்டாது காணப்பட்டனர். ஆனால் இந்நிலைமையானது மலாயாவில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தை அடுத்தும் அரசாங்கத் தொழில்களிலிருந்து யாழ்ப்பாணத்தவரை நீக்கியதைத் தொடர்ந்தும் ஓரளவிற்கு மாற்றமடையலாயிற்று. எப்படியிருந்தாலும் இந்தியருடனோ, சீனருடனோ ஒப்பிடக்கூடிய அளவில் இவர்களது அரசியல் நடவடிக்கைகள் காணப்படவில்லை. யாழ்ப்பாணத்தவர் குடித்தொகை மற்றைய இனத்தவருடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகக் காணப்பட்டதால் ஓர் அரசியல் இயக்கமாக, மலாய அரசியலில் பாதிப்பை ஏற்படுத்துமளவிற்கு முக்கியத்துவமானதாக யாழ்ப்பாணத்தவர் நடவடிக்கைகள் காணப்படவில்லை. தம் பொருளாதாரத் தேவைகளை வளம்படுத்தும் நோக்குடன் மலாயாவுக்குச் சென்ற யாழ்ப்பாணத்தவர் அங்கு அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தம் நோக்கத்தை வீணாக்க விரும்பவில்லை. அதன் காரணமாகப் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் இணைந்தவர்களாக, அவர்கள் பாதுகாப்பை வேண்டியவர்களாகச் செயற்பட்டனர். பிரித்தானிய ஆட்சி எவ்வளவு காலம் மலாயாவில் நீடிக்குமோ அவ்வளவுக்குத் தாம் உழைத்துப் பொருள் திரட்டலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். பல இனங்கள் வாழும் மலாயாவில் சிறுபான்மையினரில் ஒரு சிறு பகுதியினராக விளங்கிய இவர்கள் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து ஆட்சியுறுதியையும், நீதியையும் எதிர்பார்த்தவராக விளங்கினர். இதனால் பிரித்தானியர் ஆட்சியை எதிர்க்கும் அல்லது அகற்றும் தன்மை கொண்டவர்களாகக் காணப்படாததுடன் வளர்ந்து கொண்டுவந்த மலாயத் தேசியத்துள் தம்மைச் சேர்க்காதவராகவும் இருந்தனர். இக் காரணங்களினால் தம் நலன் கருதி மலாயாவில் பிரித்தானியர் ஆட்சிக்கு ஆதரவு, விசுவாசம் காட்டியவர்களாகவும் இயங்கினர். இதனை மலாயாவில் யாழ்ப்பாணத்தவர் மேற்கொண்டிருந்த நடவடிக்கைகள் பலவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம். மலாயாவை ஜப்பானியர் கைப்பற்றிய பின்னரும் யாழ்ப்பாணத்தவரில் பெருமளவினோர் பிரித்தானிய ஆட்சியின் ஆதரவாளர்களாகவே விளங்கினர்.

உழைக்கும் நோக்குடன் மலாயாவுக்குக் குடிபெயர்ந்த யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்தும் தம் தாய்நாடாக இலங்கையையே கருதினர். இவ்வாறு கருதியமை மலாய அரசியலிலும், அதன் தேசிய வாழ்விலும் யாழ்ப்பாணத்தவர் அக்கறை காட்டாதிருந்தமைக்கு வழிவகுத்ததெனலாம். இலங்கை அரசியல்பொறுத்து மலாயாவில் வாழும்போது காட்டிய ஆர்வமும், அக்கறையும் மலாய அரசியல் பொறுத்துக் காட்டப்படவில்லை என்றே கூறல் வேண்டும். அவ்வாறே மலாய மக்கள் பொறுத்து யாழ்ப்

பாணத்தவர் கொண்டிருந்த மனப்பான்மையும் அரசியல் வாழ்வில் அவர்களோடு இணைந்து செயற்படுத்தற்குத் தடையாகக் காணப்பட்டதெனலாம். யாழ்ப்பாணத்தவர் மலாயாவுக்குக் குடிபெயர்ந்த ஆரம்ப காலத்திலிருந்தே மலாயர் கல்வி அறிவு பெறுவதில் நாட்டமில்லாதவர்களாக, அரசாங்க தனியார் துறைகளில் இடைநிலைப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதில் விருப்பமில்லாதவர்களாகத் தம்மரபு வழித்தொழில் முயற்சிகளிலே ஈடுபட்டிருந்தார்கள். தம் தேவைகளைச் சுருக்கிச் சேமிக்கும் பழக்கமுடைய யாழ்ப்பாணத்தவரால் மலாயர் புத்திக்கூர்மை குறைந்தவர்கள் என்றும் உழைப்பதை அன்றன்றே ஊதாரித்தனமாகச் செலவழிப்பவர் என்றும், தம் பிள்ளைகளுக்குக் கல்வியை அளிப்பதில் அக்கறையில்லாதவர் என்றும் கருதப்பட்டனர். பொதுவாக மலாயர் பின்தங்கியிருந்த நிலைமையும், யாழ்ப்பாணத்தவர் அரசாங்க, தனியார் துறைகளில் இடைநிலைப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட நிலையும் மேற்குறிப்பிட்ட மனப்பான்மை ஏற்படுதற்குக் காலாயிற்று. அதாவது யாழ்ப்பாணத்தவர் தம்மை உயர்வானவர்களாகவும் மலாய் மக்களைத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களாகவும் கருதிக்கொண்டனர். இதனால் மலாயருடன் இணைந்து பிரித்தானியராட்சியை அகற்றப் போராடவோ, தேசிய வாழ்வில் ஈடுபடவோ விரும்பாதவர்களாகக் காணப்பட்டனர். தங்கள் நலன் பேணப் பிரித்தானியராட்சி நீடிப்பதை விரும்பிய யாழ்ப்பாணத்தவர் பிரித்தானியர் ஆட்சியதிகாரத்தில் இருக்கும்வரை அவர்களின் ஆதரவாளர்களாகவே செயற்பட்டனர். இக்காரணங்களினால் எதிர்ப்புத் தன்மையற்றனவாக, அரசாங்கத்துடன் ஒத்துப்போகும் தன்மை உடையனவாக இவர்கள் அரசியல் நடவடிக்கைகள் பெருமளவிற்குக் காணப்பட்டன எனலாம்.

1930 இன் பின்பாக யாழ்ப்பாணத்தவர் மலாய அரசியலில் குறிப்பிடத்தக்க அளவிற்குச் செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. 1930 க்கு முன்பான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தவர் இந்தியருடன் ஒன்றாகக் கணிக்கப்பட்டுப் பொதுவான பிரதிநிதித்துவம் தொடுவாய்க் குடியேற்றங்களின் சட்டநிரூபணசபையிலும், சமஷ்டி சபையிலும் கொடுக்கப்பட்டது. இவ்வகையில் 1923இல் பினாங்கில் வழக்கறிஞராகப் பணிபுரிந்த பி. கே. நம்பியார் தொடுவாய்க் குடியேற்றங்களின் சட்டநிரூபணசபைக்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டனர்.[1] இவ்வாறே ஐக்கிய மலாய் அரசுகளின் சமஷ்டி சபையிலும் இந்தியரும் இலங்கையரும் தமக்கும் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று தேசாதிபதி சேர் லோறன்ஸ் ஹிளிமார்ட் (Sir Lawrence Guillemard) டுக்கு விண்ணப்பம் செய்ததைத் தொடர்ந்து 1928 இல் கோலாலம்பூரில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்த எஸ். என். வீராசாமி சமஷ்டி சபையில் இந்தியர், இலங்கையர் பிரதிநிதியாக நியமனம் பெற்றனர்.[2] 1931இல் தொடுவாய்ப்பகுதி, இலங்கை இந்தியர் பிரதிநிதியாக அப்துல்காதரும், சமஷ்டிசபைப் பிரதிநிதியாக வீராசாமியும் மீண்டும் நியமனம் பெற்றார்கள்.[3] 1928 ஐத் தொடர்ந்து மலாய் அரசுகளின் அரசாங்க சபைகளிலும் (State Council)இந்தியப் பிரதிநிதிகள் நியமனம் பெற்றனர்.

1928 இல் சமஷ்டி சபையில் இந்தியப் பிரதிநிதியாக வீராசாமியை நியமித்த அரசாங்கம் அவர் மலாயாவில் வசிக்கும் இந்துக்களின் நலன்களைக் கவனிக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்டார் என்றும் பெரும்பாலான இலங்கையர் இங்கு வசிப்பதால் அவர்களும் இந்துக்களாக இருப்பதால்

அவர்கள் நலன்களைக் கருதும் வகையில் நியமனம் செய்யப்பட்டார் என்றும் குறிப்பிட்டது. அத்துடன் இலங்கையர்கூட இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என்றும் கூறியது.[4] இதனால் இந்தியருக்கான பிரதிநிதித்துவம் என்பது ஒரு மயக்க நிலைக்கு உள்ளாக்கப்பட்டது. இதுவரையும் இந்தியர் சங்கங்களிலே ஒற்றுமையுடன் இயங்கிவந்த இந்துக்கள், முஸ்லீம்கள் இந்திய சமூகத்தை மத அடிப்படையில் இவ்வாறு பிரிப்பதற்கு எதிர்ப்புக்காட்டினர். இதன் விளைவாகச் சிலவருடங்களின் பின் இந்தியப் பிரதிநிதிகளாக முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தியப் பிரதிநிதித்துவ முறைக்குள் இலங்கையரும் (யாழ்ப்பாணத்தவர்) உள்ளடக்கப்பட்டமையும், இப்பிரதிநிதித்துவ முறைக்கு இலங்கையரும் தெரியப்படலாம் என்ற உத்தரவாதமும் இவ்விரு பிரிவினருக்கிடையே அதிருப்தியை ஏற்படுத்துவதாக அமைந்தது. இந்நிலைமையானது இலங்கை, இந்திய மத்திய வகுப்பினரிடையே ஒருவித பகைமை உணர்வை ஏற்படுத்தலாயிற்று. பொதுவான நிறுவனங்களின் ஆரம்ப முயற்சிகளின் விளைவாக இவ்விரு பிரிவினரும் தங்கள் தங்கள் வழிகளில் தனியாகச் செயற்படுவதற்கு ஏற்பாடாகியது. மலாயாவில் இலங்கையர் இந்தியரிலும்பார்க்க உயர்வானவர் என்ற மனப்பான்மை கொண்டவராக இருந்தனர். மலாயாவில் இலங்கைச் சமூகத்தவர் (யாழ்ப்பாணத்தவர்) மத்திய வகுப்பினராக வெண்சட்டை உத்தியோகங்களில் அமர்ந்தவர்களாகவும் பெரும்பாலான இந்தியர் தோட்டத் தொழிலாளராகக் காணப்பட்டமையும் மேற்குறிப்பிடப்பட்ட உயர்வு மனப்பான்மைக்குக் காரணமாயிற்று.[5] இதனால் இலங்கையர் அதாவது யாழ்ப்பாணத்தவர் மிகச் சிறப்பான முறையிலும் காத்திரமான வகையிலும் அமைப்புக்களை ஏற்படுத்தக் கூடியவர்களாகக் காணப்பட்டனர். சிறிய சமூகமாக இருந்தமையால் இந்திய அமைப்புக்களைப் போலன்றிக் கட்டுக்கோப்பாக இயங்க முடிந்தது. அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவ முறையானது இரு சமூகங்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாட்டினை மேலும் அதிகமாக்கியது. மிகச் சிறிய மாவட்ட உள்ளூர் சபைகளிலிருந்து மிக உயர்ந்த சபைகள் வரையிலும் நியமனம் பொறுத்து இவ்விரு சமூகத் தலைவர்களுக்கிடையில் போட்டி நிலவியது. இதனால் தனிப்பட்ட முறையில் இவ்விரு பிரிவினருக்கிடையே கோபதாபங்களும் ஏற்பட்டன. எண்ணிக்கையளவில் பெருந்தொகையினராகக் காணப்பட்ட இந்தியரைக்கொண்ட பெராக், செலாங்கூர், நெகிரி, செம்பிலான், ஜோகூர் அரசுகளில் யாழ்ப்பாணத்தவர் அரசாங்க சபை அங்கத்தவராக நியமனம்பெற, இந்தியர் பிரதிநிதித்துவம்பெறும் வாய்ப்புக்கள் இழக்கப்படலாயின. மலாயாவிற்கு வருகைதந்த ஸ்ரீனிவாச சாஸ்திரி 1937 இன் முற்பாதியில் வெளியிட்ட அறிக்கையில் இந்தியர், இலங்கையர் (யாழ்ப்பாணத்தவர்) பகைமை உணர்வுபற்றி விபரித்துள்ளார்.[6] 1935இல் பெராக் அரசாங்க சபையில் எஸ். சீனிவாசகம் என்ற யாழ்ப்பாணத்தவரும், செலாங்கூர் அரசாங்க சபையில் ஜே. ஆர். வேதவனம் என்ற யாழ்ப்பாணத்தவரும் அங்கத்தவராக நியமனம் செய்யப்பட்டனர்.[7]

பொருளாதார மந்தத்தின் விளைவாக மலாயாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை இந்தியர், சீனர் போலவே யாழ்ப்பாணத்தவரும் அறிவிக்க நேரிட்டது. !இவர்கள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சினையாக மலாயர் தம் நாட்டில் மற்றைய இனத்தவர்களிலும் பார்க்கக் கூடிய உரிமைகளைக்

கோரியமையும், அரசாங்கம் அதற்கு அனுசரணையாக நடந்துகொண்டமையும் காணப்படுகின்றது. பொருளாதார மந்தத்திற்கு முன்பாகவே மலாயர் ''மண்ணின் மைந்தர்'' என்ற அடிப்படை அரசியல், பொருளாதார உரிமைகளைக் கோரி நின்றாலும் அதன் பின்பாகவே அவர்களது இக் கோரிக்கைகள் தீவிரமடைவதைக் காணலாம். இச் சூழ்நிலையில்தான் இந்தியர், சீனர், போலவே யாழ்ப்பாணத்தவரும் தம் உரிமைகளைப் பொறுத்து அச்சத்திற்குள்ளாகினர். முக்கியமாகத் தொழில் வாய்ப்புகளைப் பொறுத்து இந்த அச்சம் ஏற்பட்டது.

இந்திய, சீன, யாழ்ப்பாணத்துக் கற்ற மத்திய வகுப்பினரின் சமமான தொழில் வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையானது மலாயாவின் அரசியல், குடியுரிமை அம்சங்களுடன் (Political and Civil Status) நெருங்கிய வகையில் பின்னிக் காணப்பட்டது. பொருளாதார நெருக்கடியினால் கஷ்டப்பட்டிருந்த நிலையில் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய பிரேரணையும், நிர்வாக மாற்றங்களும் மலாயாவில் குடியேறியிருந்தோரிடம் தம் எதிர்காலம்பற்றிய அச்சத்தை ஏற்படுத்தலாயின. அதிகாரப் பரவலாக்கல் பிரேரணை பற்றி அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பாகப் பல்வேறு மக்களது கருத்துக்களையும் அறிதற்பொருட்டுப் பிரித்தானிய அரசாங்கம் சேர். சாமுவேல் வில்சன் என்பவரை மலாயாவிற்கு அனுப்பியது. மலாயரல்லாத சமூகத்தவரது தூதுக்குழு சமஷ்டி சபையில் இந்திய அங்கத்தவராக இருந்த வீராசாமி தலைமையில் இவரைச் சந்தித்தது. 1932 இல் வெளியிட்ட தன் அறிக்கையில் இத் தூதுக்குழுவின் விண்ணப்பங்களையும், அச்சத்தையும் குறிப்பிட்டுள்ளார்[8] இந்தியர், யாழ்ப்பாணத்தவர் மலாய் அரசுகளுக்குப் பெருமளவிலான அதிகாரங்கள் மாற்றப்படுவது இதுவரை தாம் அரசாங்க விடயங்களில் அனுபவித்து வந்த சிறியளவிலான செல்வாக்கையும், தங்களது பொருளாதாரச் செழிப்பையும் பாதிக்கும் என்று கவலைகொண்டனர். இம் மத்திய வகுப்பினர் இதுவரை அரசாங்கத் தொழில் வாய்ப்புக்களில் பெற்றிருந்த முக்கிய இடம் பாரபட்சமான முறையிலே பாதிக்கப்படுமென்று அச்சம் கொண்டனர். ஏற்கெனவே மலாய் மக்களிடையே ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி வளர்ச்சியினால் இதுவரை கற்ற இந்தியரும், யாழ்பாணத்தவரும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றிருந்த துறையிலே கூடியளவிற்குத் தொழில் வாய்ப்புக்களை மலாயர் பெற்றுக்கொண்டனர். கற்ற இந்தியர், யாழ்ப்பாணத்தவர் தாம் பெற்ற அற்ப கல்வி வசதிகள் பாதிக்கப்படுமென்றும் சமஷ்டி அரசாங்க சபைகளில், பொது அங்கங்களில் (Public bodies) தாம் பெற்றிருந்த சிறிய பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படுமென்றும் பயந்தனர். சுருங்கக் கூறின் அதிகாரப் பரவலாக்கலின் விளைவு மலாயருக்குச் சார்பான கொள்கையை (Pro Malay policy) ஊக்குவிப்பதாகவும், தம் சமூகத்தவருடைய நலன்களைக் கடுமையாகப் பாதிப்பதாகவும் இருக்குமென்று அஞ்சினர். இந்திய வர்த்தக சமூகத்தவரும் மலாயாவில் தாம் பெருமளவில் முதலீடு செய்திருப்பதாகவும், அதிகாரப் பரவலாக்கலினால் தாம் நட்டமடைய வேண்டி வருமென்றும் விண்ணப்பம் செய்தனர். இவ்வாறே செலாங்கூரில் வாழ்ந்த இலங்கையர் (பெரும்பான்மையோர் யாழ்ப்பாணத்தவர்) 1934 இல் சேர்.சாமுவேல் வில்சனிடம் தம் குறைபாடுகளைத் தீர்த்துவைக்குமாறு விண்ணப்பம் செய்வதனைக் காணலாம்.

அதில் ஓர் அம்சமாக எதிர்காலத்தில் அமைக்கப்படும் எல்லா அரசுகளின் அரசாங்க சபைகளிலும் இலங்கையருக்கான நேரடிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று கோருவதை அவதானிக்கலாம்.9

அதிகாரப் பரவலாக்கலைப் பொறுத்து அளிக்கப்பட்ட பல்வேறு கருத்துக்களையும் பிரித்தானிய அரசாங்கமும் மலாய் அரசுகளும் ஆலோசித்து ஏற்கெனவே எடுக்கப்பட்ட கொள்கையை மாற்றுவதற்கு இவை போதுமானவையாக இல்லையென்று கூறிவிட்டன. சேர். சாமுவேல் வில்சன் மலாயரல்லாதாருடைய குறைபாடுகளைக் கேட்டபின்னர் அதிகாரப் பரவலாக்கலின் கீழ் இவர்கள் நலன்கள் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுமென்ற உறுதியை அளித்திருந்தார். அத்துடன் தொடுவாய்க் குடியேற்றங்களில் பிரித்தானிய பிரஜையை (British subject) ஒத்தவராகவும், ஐக்கிய மலாய் அரசுகளில் பிரித்தானிய பாதுகாப்புக்கு உட்பட்டவராகவும் (British protected persons) கணிக்கப்படுவர் என்பது அரசாங்கத்தின் கொள்கை என்று குறிப்பிட்டார்.10

மலாயாவில் வசிக்கும் இந்தியர், யாழ்ப்பாணத்தவர் மலாய நிர்வாக, தொழில்நுட்ப சேவையில் சேர்வதுபற்றிப் பிரச்சினைகள் காணப்பட்டன. ஐக்கிய மலாய் அரசுகளில் மலாயருக்கெனத் தனியான நிர்வாகசேவை ஆரம்பிக்கப்படும் வரை தொடுவாய்க் குடியேற்றங்களிலும், ஐக்கிய மலாய் அரசுகளிலும் மேற்குறிப்பிட்ட சேவையானது பிரித்தானியர் கையிலேயே காணப்பட்டது. 1932 இல் தொடுவாய்க் குடியேற்றங்களில் உள்ளூர் சிவில் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது அங்கு வசித்த இளைஞர் அச்சேவையில் பங்குபெறத் தகுதியானவர்களாகக் காணப்பட்டனர். இச்சூழ்நிலையில் சமஷ்டி சபையில் இந்திய அங்கத்தவராக இருந்த டாக்டர் எஸ். ஆர். கிருஷ்ணன் 1934 ஒக்டோபரில் ஐக்கிய மலாய் அரசுகளின் மலாய நிர்வாக சேவையில் ஒரு தொகைப் பதவிகள் மலாயரல்லாதோருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். அரசாங்கம் மலாய வைத்திய, தொழில்நுட்ப சேவைகளில் சலுகைகள் வழங்குவதாகவும் ஆனல் மலாய நிர்வாகசேவையில் இந்தியரை (யாழ்ப்பாணத்தவர் உட்பட) அனுமதிக்க முடியாதென்றும் கூறியது.11 தொடுவாய்க் குடியேற்றங்களில் இந்தியருக்குப் பிரித்தானியப் பிரஜைக்குரிய உரிமைகளும், வாய்ப்புக்களும் வழங்கப்படுமென்றும், மலாய் அரசுகளில் மலாயரல்லாதவர் மலாயப் பிரஜையாக வர முடியாதென்றும் அறிவித்தது. மலாய் அரசுகளில் இந்தியர் எவ்வளவு காலம் வசித்தாலும் அவர் பிரித்தானியப் பாதுகாப்புக்கு உட்பட்டவராக விளங்குவாரே தவிர அவர் சுல்தானின் மலாயப் பிரஜைக்குரிய சமமான உரிமைகளைக் கோரமுடியாது காணப்பட்டார். 1936 இல் சமஷ்டிசபையில் வீராசாமி, சுல்தானின் அரசுப்பிரதேசங்களில் பிறந்த இந்தியருக்குச் சுல்தானின் பிரஜை (மலாய்ப் பிரஜை) என்ற அந்தஸ்து கட்டாயம் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடினர்.12 ஆனல் பிரித்தானிய ஆட்சியாளர் சுல்தானின் மரபுவழியான அரசியல் நடைமுறைகளை மாற்றியமைக்க விரும்பாது காணப்பட்டனர். அத்துடன் மலாய் அரசுகளின் உயர் ஸ்தானிகர் மலாயாவுக்குக் குடிபெயர்ந்தோரை அந்நியர் என்றும் அவர்கள் மலாயாவில் பதவிகள் கோருவதை ஆதரிக்க முடியாதென்றும் குறிப்பிட்டார்.13 இவற்றுக்கு எதிராக இந்தியர், யாழ்ப்பாணத்தவர் மத்தியில் பெரும் கண்டனங்கள் எழலாயிற்று. இலங்கையிலிருந்து வெளிவந்த பத்தி

ரிகை ஒன்றில் இவ்விடயம் பலத்த கண்டனத்திக்கு உள்ளாகியிருப்பதைக் காணமுடிகின்றது.14

தொழில் வாய்ப்புக்களைப் பெற்று மலாயப் பிரதேசங்களுக்குச் சென்ற யாழ்ப்பாணத்தவர் அங்கு நிரந்தரமாகத் தங்கிவிடும் எண்ணத்தை ஆரம்பத்தில் கொண்டிருக்கவில்லை. பொதுவாக மலாயாவை உழைக்கும் இடமாகக் கருதியதுடன் தம் ஒய்வு காலத்தில் யாழ்ப்பாணத்தில் வந்து வாழவும் எண்ணியிருந்தனர். ஆனல் மலாயாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சமூகமாற்றங்கள் யாழ்ப்பாணத்தவர் நோக்கம் பொறுத்து சிலமாற்றங்களை ஏற்படுத்தக் காலாயிற்று. அதாவது மலாயாவைத் தம் நிரந்தர வதிவிடமாகக் கொள்வதா? இல்லையா? யாழ்ப்பாணத்தவர் இங்கு குடிபெயர்வதை ஊக்குவிப்பதா? இல்லையா? போன்ற விடயங்களில் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களானுர்கள். 1920 களின் பின்பாகவிருந்தே மேற்குறிப்பிட்ட விடயங்கள் பொறுத்துச் சிந்தனை ஏற்பட்டிருந்தாலும், 1930இன் பின்பாகவே, பொருளாதார மந்தத்தைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தவரிடையே இவ்விடயங்கள் தீவிர கவனத்தைப் பெறலாயின. மலாயர் படிப்படியாக அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெறுவதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தவரது வேலை வாய்ப்புக்கள் அருகி வந்ததைக் கீழ்க் காட்டப்படுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

"Today, it is a standing general order in the government and municipal bodies, that no candiate who is neither locally born nor locally educated can be employed in their service. Malaya is then in the throes of nation building, "Sons of the soil first" is the cry. Your Ceylonese might have been poineers and contributed considerable to the development of Malaya. If so the Malayan government thanks them for it, but regrets that it has no room for their sons born in Ceylon".15

மலாயாவிற்குக் குடிபெயர்ந்த யாழ்ப்பாணத்தவர் சுதந்திரமான தொழில் முயற்சிகளில் ஈடுபடாதிருந்ததுடன் பெருமளவிற்கு அரசாங்க, தனியார் தொழில்களை நம்பியிருந்தமை பொருளாதார மந்தத்தின்போது மற்றைய இனத்தவர்களைக் காட்டிலும் அவர்களைப் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாக்கியது. அத்துடன் மலாயாவில் குடியிருப்புக்களை அமைத்து நிரந்தரமாக வாழ்வது பற்றியும் அக்கறை கொள்ளாதிருந்தனர். சமூக முன்னேற்ற உணர்வுடன் கூடிய ஒற்றுமைப்பட்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தாதும் தீர்க்கதரிசனமற்ற நிலையில் செயற்பட்டவர்களாகக் காணப்பட்டனர். இக் குறைபாட்டினை உதயதாரகைப் பத்திரிகை மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளது.16

மலாயாவில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தை அடுத்தும், பின்னர் இரண்டாம் உலகப்போர் முடிவில் ஜப்பானியரிடமிருந்து மலாயாவைத் திரும்பப் பிரித்தானியர் கைப்பற்றியதை அடுத்தும் குறிப்பிடத்தக்க அளவு யாழ்ப்பாணத்தவர் இலங்கை திரும்பினர். ஆனல் மலாயாவைத் தம் நிரந்தர வதிவிடமாக்க விரும்பிய யாழ்ப்பாணத்தவர் பொறுத்துக் குடியுரிமை பெறுதல் முக்கிய பிரச்சினையாகக் காணப்பட்டது. ஏனென்றல் குடியுரிமை பெறுவதைப் பொறுத்ததே மலாயாவில் இவர்களின் எதிர்கால

அரசியல், பொருளாதார, சமூக நிலைமை தங்கியிருந்தது. ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றுவதற்கு முன்பான காலத்தில் தொடுவாய்க் குடியேற்றங்களில் பிரித்தானியப் பிரஜைக்குரிய உரிமைகளும் வாய்ப்புக்களும், ஐக்கியப்பட்ட மலாய் அரசுகளில் பிரித்தானியப் பாதுகாப்புக்கு உட்பட்டவர் என்ற அந்தஸ்த்தும் மலாயா அல்லாதோருக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந் நிலையானது சுல்தானின் மலாயப் பிரஜைகளுக்குள்ள உரிமைகள், வாய்ப்புகள் என்பவற்றிலிருந்து குறைந்ததாகவே காணப்பட்டது. இந்தியர், யாழ்ப்பாணத்தவர் இந் நிலைமையை மாற்றும்படி கோரியும் எப்பலனும் 1940 வரை ஏற்படவில்லை. ஜப்பானியர் கைப்பற்றலைத் தொடர்ந்து இவ்விவகாரம் இயல்பாகவே கைவிடப்பட்டது. மீண்டும் பிரித்தானியராட்சி ஏற்படுத்தப்பட்டதும் குடியுரிமை பொறுத்த பிரச்சினை ஏற்படலாயிற்று. அந்தவகையில் பிரித்தானிய அரசால் வழங்கப்பட்ட மலாய யூனியன் திட்டத்தில் (Malayan Union Proposal) மலாயர், சீனர், இந்தியர் எல்லோரும் இலகுவில் குடியுரிமையைப் பெறக்கூடிய ஏற்பாடுகள் காணப்பட்டன. ஆனால் மலாயரும், சுல்தான்களும், தேசிய இயக்கங்களும் பிரித்தானிய அதிகாரிகளும் காட்டிய எதிர்ப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டு மலாயக் கூட்டாட்சி அமைப்புமுறை (Federation of Malaya) இவர்களால் ஏற்கப்பட்டது. இம் முறையில் குடியுரிமை பெறுவதற்கு வேண்டப்பட்ட தகுதிகள் அதிகமானவை என்றும், அவற்றைக் குறைக்கும்படியும், சட்டநிரூபண சபையில் இந்தியர் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும்படியும் இந்தியரால் விடுக்கப்பட்டது.[17] இறுதியில் 1958இல் நடைமுறைக்கு வந்த மலாயாக் கூட்டாட்சிமுறையில் 50 உத்தியோகப் பற்றற்றவரைக்கொண்ட சபையில் 22 மலாயருக்கும், 14 சீனருக்கும், 7 ஐரோப்பியருக்கும், 5 இந்தியருக்கும், 1 இலங்கையருக்கும், 1 யூரேசியர்க்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. சட்டரீதியாகக் குடியுரிமை பெறுவதற்கு 15 ஆண்டுகள் மலாயாவில் வசித்திருக்க வேண்டும் என்பது பேணப்பட்டது. விண்ணப்ப அடிப்படையில் குடியுரிமை பெறுவதற்கு முன்பாக 12 வருடங்களில் 8 வருடங்கள் அல்லது 20 வருடங்களில் 15 வருடங்கள் மலாயாவில் வசித்திருக்க வேண்டுமென்று வேண்டப்பட்டது. ஆங்கிலம் அல்லது மலாய் மொழித் தேர்ச்சியும், மலாயாவை நிரந்தர வதிவிடமாக்கும் உறுதியுரையும் வேண்டப்பட்டது.[18] குடியுரிமை பற்றிய சட்டங்கள் 1952, 1957 ஆம் ஆண்டுகளில் மேலும் தாராளமாக்கப்பட்டுக் குடியுரிமை பொறுத்து இந்தியர் யாழ்ப்பாணத்தவரை எதிர்நோக்கிய பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. இதன்படி மலாயக் கூட்டமைப்பில் சுதந்திரத்திற்கு முன்போ அல்லது பின்போ பிறந்த எவரும் அதன் குடியுரிமை பெறலாம் என்றும், விண்ணப்ப அடிப்படையில் குடியுரிமை பெறுவதற்கான வதிவுகாலம் தொடர்ச்சியான 7 வருடங்களுள் 5 ஆகக் குறைக்கப்பட்டும் மலாயக் கூட்டமைப்புள் தொடர்ச்சியான 12 வருடங்களுள் 8 வருடங்கள் வசித்த எவரும் குடியுரிமை பெறலாம் என்றும் மாற்றங்கள் செய்யப்பட்டுக் குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டது.[19]

மலாயாவில் யாழ்ப்பாணத்தவரிலும் பார்க்கப் பெருந்தொகையான இந்தியர் வாழ்ந்தமையால் அவர்கள் மலாய மத்திய இந்தியர் சங்கம் (The Central Indian Association) போன்றே, பின்னர் மலாய இந்திய காங்கிரஸ் (Malayan Indian Congress) போன்றே, பெரிய இயக்கங்களை

நடத்தக்கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்தவர் எல்லோரையும் அடக்கிய சங்கம் ஒன்று மலாயாவில் இல்லாது போனலும் தங்கள் தனிப்பட்ட திறமை, சேவை அடிப்படையில் சமஷ்டி சபையிலும், மலாயாவின் பல்வேறு அரசுகளின் அரசாங்கசபைகளிலும் சுகாதார சபை (Sanitary Board) மாநகரசபை (Municipal Board) ஆஸ்பத்திரி ஆலோசனைச்சபை (Hospital Advisary Committee) போன்ற பல சபைகளிலும் அங்கத்தவர்களாகப் பதவி பெற்றிருந்தனர். 1940 களின் பின்பாக மேற்குறிப்பிடப்பட்ட சபைகளில் குறிப்பிடத்தக்களவு யாழ்ப்பாணத்தவர் அங்கத்துவம் பெற்றுள்ளதைக் காணலாம். இவ்வகையில் 1935 இல் பெராக் அரசாங்க சபையில் திரு. எஸ். சீனிவாசகம் அவர்களும், செலாங்கூர் அரசாங்க சபையில் ஜே. ஆர். வேதவனம் அவர்களும் நியமனம் பெறுகின்றனர். அரசியல் நடவடிக்கையில் முக்கிய ஒரு கட்டமாக 1949 இல் டத்தோ சேர். கிளவ் துரைசிங்கம் என்ற யாழ்ப்பாணத்தவர் Communities Liaison Committee தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து பல்வேறு யாழ்ப்பாணத்தவர் மலாய அரசுகளின் அரசாங்க சபைகளில் இலங்கையர் பிரதிநிதிகளாக நியமனம் பெறுவதைக் காண்கிறோம். செலாங்கூர் அரசாங்க சபையில் ஈ. சீ. துரைசிங்கம், ஆர். பி. எஸ். ராஜசூரியா, ரி. இராஜேந்திரா என்போரும், நெகிரி செம்பிலான் அரசாங்க சபையில் எஸ். சின்னத்தம்பி, ஆர். நாகரெத்தினம், எம். நட்சத்திரம் என்போரும், ஜோகூர் அரசாங்க சபையில் டத்தோ டாக்டர் மூத்ததம்பி, எஸ். பொன்னம்பலம், என். பாலசிங்கம் ஆகியோரும், பெராக் அரசாங்க சபையில் ஏ. மகேந்திரன், டாக்டர் எஸ். பேரம்பலம் ஆகியோரும், பினங்கு குடியேற்ற சபையில் நிக்கலஸ் பொன்னுத்துரை அவர்களும், பஹாங் அரசாங்க சபையில் வீ. இளையதம்பி அவர்களும் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.20 மேலே குறிப்பிடப்பட்டதிலிருந்து மலாய் அரசுகளின் அரசாங்க சபையில் எந்தளவிற்கு யாழ்ப்பாணத்தவர் பங்குகொண்டிருந்தனர் என்பதையும், பிரித்தானிய ஆட்சியாளருக்கும் இவர்களுக்குமிடையே நிலவிய ஒத்துழைப்பையும், அவர்கள் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு விளங்கிக்கொள்ளலாம்.

1948 இல் மலாயக் கூட்டமைப்பின்கீழ் உருவாக்கப்பட்ட சட்டநிரூபணசபையிலும் (Legislative Council) யாழ்ப்பாணத்தவர் அங்கத்துவம் பெற்றுள்ளனர். இவ்வாறு முதலில் நியமிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தவராக டத்தோ சேர். கிளவ் துரைசிங்கம் விளங்குகின்ருர். 1951 இல் சமஷ்டி சபையில் ''அங்கத்தவர் முறை'' (Member system) அறிமுகப்படுத்தப்பட உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் சிலதுறைகளுக்குப் பொறுப்பானவர்களாக வரும் வாய்ப்பு ஏற்பட்டது. இப் பொறுப்பு மந்திரிப் பதவியை ஒத்திருந்தாலும் இவர்கள் உயர் ஸ்தானிகருக்கே பொறுப்பானவர்களாக விளங்கினர். இவ்வகையில் 1951 இல் கல்வித்துறைக்கு அங்கத்தவராக (Member for Education) துரைசிங்கம் நியமனம் பெற்ருர். இவர் கல்வித்துறைக்குப் பொறுப்பாக விருந்தகாலத்தில் பெருமளவிலான யாழ்ப்பாணத்தவர் ஆசிரியர் பதவிகளைப் பெற்றுக்கொள்ள உதவியவராகக் காணப்பட்டார்.22 இவர் சட்டநிரூபணசபையில் வகித்த இடத்திற்கு இன்னெரு யாழ்ப்பாணத்தவரான டாக்டர் ஏ. ஈ. துரைசாமி நியமிக்கப்பட்டார். இவர் 1951 இல் இருந்து 1955 வரை சட்டநிரூபணசபை அங்கத்தவராகக் கடமையாற்றினர். அத்துடன் ஒய்வூதியம், கொடுப்பனவுகள் சம்பந்தமாக அறிக்கை

தயாரிப்பதற்கு சமஷ்டி சட்டநிருபணசபையால் 1955 இல் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் அங்கத்தவராகவும் விளங்கினர்.[23] குழுவின் அறிக்கையைப் புதிதாக அமைக்கப்பட்ட சமஷ்டி சட்டநிருபணசபை ஏற்றுக்கொண்டதையடுத்து ஓய்வூதியம் கொடுப்பனவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு 1955 ஜனவரியில் இருந்து கொடுக்கப்படலாயிற்று. இன்னொரு யாழ்ப்பாணத்தவரான நிக்கலஸ் பொன்னுத்துரை முதலாவது சமஷ்டி சபையின் கூட்டத்திற்கு பினங்குக் குடியேற்றத்தின் உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். இவர்களைவிட மலாய் அரசுகளில் பாராளுமன்ற அங்கத்தவராகவும், மாநகர மேயர்களாகவும், மாநகர, நகர சபை அங்கத்தவர்களாகவும் யாழ்ப்பாணத்தவர் பலர் இருந்துள்ளனர். சிங்கப்பூர் தனியாகப் பிரிந்தபின் அதன் கலாச்சார அமைச்சராகவும், வெளிநாட்டமைச்சராகவும், சபாநாயகராகவும், பாராளுமன்ற அங்கத்தவர்களாகவும், வெளிநாட்டுத் தூதுவர்களாகவும், முக்கிய பதவிகளையும், பொறுப்புக்களையும் யாழ்ப்பாணத்தவர் வகித்துள்ளனர். எண்ணிக்கை அளவு பொறுத்துச் சிறுதொகையினராகக் காணப்பட்டாலும் மலாயாவின் அரசியல் வளர்ச்சி, உள்ளூர் நிர்வாகம் பொறுத்துக் குறிப்பிடத்தக்களவு பங்கினை யாழ்ப்பாணத்தவர் வகித்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தவர் மலாயாவில் ஆற்றிய சேவைகளையும் அவர்களது விசுவாசத்தையும் கௌரவித்துப் பல கௌரவப்பட்டங்களை அரசு அளித்திருப்பதைக் காணலாம். இக் கௌரவப்பட்டங்கள் சில பிரித்தானிய அரசினாலும், சில மலாய் சுல்தான்களாலும் அளிக்கப்பட்டவையாக உள்ளன. மலாய் சுல்தான்களுடன் நெருங்கிய நட்புறவு கொண்டு யாழ்ப்பாணத்தவர் சிலர் இருந்ததையும் அறிய முடிகின்றது. இக்கௌரவப் பட்டங்கள் பிரித்தானிய அரசரின் முக்கிய தினங்களின் போதும் மலாய் சுல்தான்களின் கொண்டாட்டங்களின்போதும் வழங்கப்பட்டன. மலாயாவில் சேவையாற்றி, யாழ்ப்பாணத்திற்கு மீண்டபின்புகூட, பிரித்தானிய அரசாங்கம் இலங்கை அரசு மூலமாக வடமாகாண அரசாங்க அதிபரைக்கொண்டு அவர்கள் சேவையைப் பாராட்டிப் பட்டம் வழங்கியிருப்பதைக்கண்டு கொள்ளலாம்.[24] பொதுவாக மலாயாவில் சமூக, நிர்வாக, அரசியல் பொருளாதாரத் துறைகளில் யாழ்ப்பாணத்தவர் ஆற்றிய சேவைகளுக்காகவே இக்கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட பட்டங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

C. B. E. (Commander of the order of the British Empire)
O. B. E. (Officer of the order of the British Empire)
M. B. E. (Member of the order of the British Empire)
I. S. O. (Imperial Service Order)
I. S. M. (Imperial Service Medal)
J. P. (Justice of the Peace)
S. M. T. (Setia Makhota Trengganu – officer of the crown of Trengganu)
P. J. K. (Pingat Jasa Kebahaktian - Meritorious Service Medal)

மலாய் அரசுகளின் சுல்தான்கள் பலரிடமிருந்து யாழ்ப்பாணத்தவர் சமாதான நீதவான் (J. P) பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

1929 இலே சிங்கப்பூர் நகரில் இருந்த ஐந்து இலங்கையைச் சேர்ந்த சமாதான நீதவான்களும் யாழ்ப்பாணத்தவராகவே காணப்பட்டனர்.[25] யாழ்ப்பாணத்தவரும் மேற்குறிப்பிடப்பட்ட பட்டங்களைப் பெற்றுக் கொள் வதைப் பெரும் கௌரவமாகக் கருதினர்.

மற்றைய இனத்தவருடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தவர் எண்ணிக்கை அடிப்படையில் சிறு அளவினராகக் காணப்பட்டதால் இயக்க ரீதியில் குறிப்பிடத்தக்க பங்கினை மலாய அரசியல் பொறுத்து வகிக்க முடியாதவராக இருந்தனர். இதனுல் பிரித்தானிய ஆட்சியாளரை எதிர்க்கும் தன்மை கொள்ளாது, மேலும் தம் நம்பிக்கையையும், விசுவாசத்தையும், ஒத்துழைப்பையும் காட்டுவதன் மூலம் தங்கள் நலன்களைப் பாதுகாக்கலாம் என்ற வகையில் இயங்கியவராகக் காணப்பட்டனர். மலாயாவை உழைக்கும் இடமாகக் கருதியதாலும், யாழ்ப்பாணத்தின்மீது அளவுக்கதிகமான ஈடுபாடு கொண்டிருந்தமையாலும், மலாயாவை தம் நிரந்தர வதிவிடமாகக் கொள்ளவோ, அதன் அரசியல் விவகாரங்களில் ஈடுபடவோ அதிக ஆர்வம்காட்டாதே இருந்தனர். அவர்கள் எந்தளவிற்கு யாழ்ப்பாணத்துடன் ஒட்டியிருந்தனர் என்பதைப் பின்வருவதிலிருந்து நன்கு விளங்கிக்கொள்ளலாம்.

"Their hearts and minds are constantly with their friends and relatives in Ceylon and in all of them, even among rare cases who have invested and settled in Malaya, there is ever present, the desire to go back to Ceylon when their job here is done"[26]

மலாய் அரசியலில் அதிக ஈடுபாடு காட்டாதபோதிலும் தம் தாய் நாட்டின் அரசியல் பொறுத்துக் கூடிய அக்கறை உள்ளவர்களாக, மலாயாவின் பலபாகங்களிலும் அவர்களால் அமைக்கப்பட்ட சங்கங்களில் இலங்கையில் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் பொறுத்துக் கலந்தாலோசிப்பவராகச் செயற்பட்டனர். இத்தகைய ஒரு முயற்சியாக 1903 இல் தைப்பிங் ''இலங்கையர் சங்கம்'' இலங்கைச் சட்டநிருபண சபையிலே தமிழர் பிரதிநிதியாக ஒருவரைத் தேசாதிபதி நியமிப்பதற்குப் பெயரைக் கொடுக்கும் முகமாகக் கூட்டப்படுவதைக் குறிப்பிடலாம்.[27] இக் கூட்டத்திலே பேசிய யாழ்ப்பாணத்தவர் ஒருவர், சட்டநிருபண சபையிலே தமிழர் பிரதிநிதியாக நியமிக்கப்படுபவர் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்ட தமிழராக இருக்கவேண்டுமென்று இலங்கைத் தேசாதிபதியைக் கேட்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். முக்கிய தீர்மானமாக டாக்டர் றெக்லூட்டின் இடத்திற்கு தமிழர் பிரதிநிதியாகத் தேசாதிபதி நியமிப்பதற்கு வழக்கறிஞர் ஏ. கனகசபை அவர்களின் பெயரைத் தெரிந்தெடுத்தமை அமைந்தது. இந்த ஆரம்பக்கட்டத்தில் மலாயாவிலிருந்த யாழ்ப்பாணத்தவர் இலங்கை அரசியல் பொறுத்து எத்தகைய ஆர்வம் கொண்டிருந்தனர் என்பதற்கு இச் சம்பவம் தக்க சான்ருக அமைகின்றது. அவ்வாறே 1911 இல் சட்டநிருபண சபையில் கற்ருேருக்கான இலங்கையர் பிரதிநிதித்துவத்திற்கு பொன்னம்பலம் இராமநாதனுக்காக மலாயாவின் பல பாகங்களிலும் வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர் ஆதரவாகக் கூட்டங்கள் நடத்தியுள்ளனர். இராமநாதன் வெற்றி பெற்றதையறிந்த யாழ்ப்பாணத்

தவர் வாழ்த்துச்செய்தி அனுப்பியதற்குக் குறிப்புக்கள் உண்டு. சிங்கப்பூர் இலங்கைத்தமிழர் சங்கத்தில் இராமநாதன் தெரிந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கூட்டமொன்றும் நடைபெற்றது.[28]

1920 இல் மனிங் தேசாதிபதி தலைமையில் மேற்கொள்ளப்படவிருந்த அரசியல் சீர்திருத்தங்களுக்கு ஆதரவாகக் கோலாலம்பூரில் பெருமளவு யாழ்ப்பாணத்தவர் உட்பட இலங்கையர் ஒன்றுகூடிப் பின்வரும் தீர்மானத்தை எடுத்தனர்.

"That this meeting, while noting with satisfaction the progress made by the Ceylon Deputation to London and appreciating the sympathetic attitude of the secretarv of State for the colonies towards the aspirations of Ceylonese express the earnest hope that the fullest measure of reform prayed for, will speedily be granted"[29] இக் கூட்டத்திலே இதற்கு எதிராகச் சிலர் கருத்துத் தெரிவித்தாலும் இறுதியில் பெரும்பாலானவர்களால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந் நடவடிக்கைகூட மலாயாவில் பிரித்தானிய ஆட்சியாளரின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் வலுப்படுத்தும் நோக்கம் கொண்டதாகவே அமைந்ததெனலாம்

1924 ஆம் ஆண்டில் இலங்கையின் அரசியல் தலைவராகவும், தமிழ் மக்களின் பெருந்தலைவராகவும் விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் மலாயாவுக்கு வருகை தந்தபோது அவருக்கும் அவரது பாரியாருக்கும் கோலாலம்பூரில் பெரியதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.[30] இவர் மலாயாவில் இலங்கையருக்கு உண்டாகியிருக்கும் பல வசதியீனங்களை விசாரித்துச் சென்றவராகக் குறிப்பிடப்படுகிறார். இலங்கையின் பிரசித்திபெற்ற தமிழ் அரசியல் தலைவர் மலாயாவுக்குச் சென்றமை இதுவே முதலாவதாக அமைந்தது. 1927 இல் இலங்கைச் சட்டசபை அங்கத்தவராகிய நடேச ஐயர் மலாயா சென்றபோது அங்குள்ள இலங்கையரால் மலாயாவில் பிறந்த இலங்கையர் இலங்கையில் பதவி பெறுவது சம்பந்தமாக எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்பதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது.[31] இதற்கு மலாயாவை உழைக்கும் இடமாகக் கருதியமையும் இலங்கையையே தம் தாய் நாடாகக் கொண்டமையுமே காரணமாதல் வேண்டும். 1930 இன் பின்பாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும், வேலையினின்றும் நீக்கும் கொள்கையிலும் யாழ்ப்பாணத்தவர் பெருமளவு பாதிக்கப்பட்டபோது இலங்கை அரசாங்கம் இதில் தலையிட வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுதலை அவதானிக்கலாம்.[32]

தொடுவாய்க் குடியேற்றத்தில் கடமையாற்றும் இலங்கை இந்துக்கள் (யாழ்ப்பாணத்தவர்) தங்கள் விதவைகள், அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்தில் (Widows and orphans pensions Scheme) சேர்த்துக் கொள்ளப்படாமல் இருப்பது பற்றியும் ஐக்கிய மலாய் அரசுகளில் கடமையாற்றுபவர் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்பதனையும், இலங்கை இந்துக்கள் ஒருதார மணத்தையே கொண்டுள்ளனர் என்றும் மலாயாவில் உள்ள இலங்கைத் தமிழர் சங்கங்கள் மூலமாகத் தொடுவாய்க் குடியேற்ற அரசாங்கத்திற்கு இக் குறைபாட்டினை நீக்குமாறு விண்ணப்பம் செய்த

னர்.[33] ஏற்கெனவே ஐக்கிய மலாய் அரசுகளில் கடமையாற்றி இவ் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் இருந்தவர்கள்கூட, அதிகாரப் பரவலாக்கல் கொள்கையினால் தொடுவாய் குடியேற்றங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பொழுது மேற்படி திட்டத்தில் சேர்க்காதும் விடப்பட்டிருந்தனர். 1937 இல் இலங்கை அரசாங்கசபை அங்கத்தவரான திரு. ஆர். ஸ்ரீபத்மநாதன் சிங்கப்பூருக்கு வருகை தந்தபொழுது சிங்கப்பூர் ''இலங்கைத் தமிழர் சங்கம்'' மேற்குறிப்பிட்ட குறைபாடு சம்பந்தமாக நிவாரணம் தேடும் வகையில் விண்ணப்பம் செய்ததுடன், இலங்கையிலுள்ள அரசாங்க சபைத் தமிழ் அங்கத்தவர்களான பி. வைத்திலிங்கம், ஜி. ஜி. பொன்னம்பலம், ஆர். சரவணமுத்து, ஈ. ஆர். தம்பிமுத்து, எஸ். நடேசன் ஆகியோருக்குத் தம் நிலையை எடுத்துக் கூறும் கடிதங்களை அனுப்பியதுடன் வேண்டிய உதவிகளைச் செய்யுமாறும் கேட்டுக் கொண்டனர்.[32] நாடுதிரும்பிய ஸ்ரீபத்மநாதன் மேற்படி விடயத்தை இலங்கையின் பிரதம காரியதரிசியின் கவனத்திற்கு எடுத்து, அவர் மூலம் தொடுவாய்க் குடியேற்றங்களின் குடியேற்றக் காரியதரிசியுடன் தொடர்புகொண்டு இக் குறைபாடு தீர்க்கப்பட்டது. இவ்வகையில் தொடுவாய்க் குடியேற்றத்திலுள்ள யாழ்ப்பாணத்தவர் இலங்கை அரசாங்க சபை அங்கத்தவர் மூலம் மேற்படி குறைபாட்டினைத் தீர்த்துக் கொண்டனர்.

1945இல் மலாயாவை ஜப்பானியரிடமிருந்து திரும்பக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையர் நிலைமைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு திரு. வி. குமாரசுவாமியைத் தலைவராகக்கொண்ட குழுவை அனுப்பியது. இக் குழுவின் அறிக்கை மலாயாவில் இலங்கையர் பற்றிய ஆய்வுக்குச் சிறந்த மூலாதாரமாகப் பயன்படுகிறது.[33] 1947 இல் மலாயா புங்குடுதீவு ஐக்கிய சங்கம் அடுத்துவரும் பாரளுமன்றத் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு திரு. ஜே. சி. அமரசிங்கம் அவர்களையே பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்றும், தீவுப்பகுதி மக்கள் அனைவரும் அவருக்கு ஆதரவாக வேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.[34] இலங்கை சுதந்திரமடைந்த 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி மலாயாவின் பலபாகங்களிலும் இருந்த யாழ்ப்பாணத்தவர் சுதந்திரதினக் கொண்டாட்டங்களை நடாத்தினர். முக்கியமாகக் கோலாலம்பூர் நகர மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திரதின விழாவில் மலாய அரசாங்கத்தின் உயரதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இத்தகைய சம்பவங்கள் யாழ்ப்பாணத்தவர் மலாயாவிலிருந்தாலும் இலங்கை அரசியல் பொறுத்து எந்தளவு ஈடுபாட்டைக் கொண்டிருந்தனர் என்பதற்கு தக்க சான்றாக அமைகின்றன.

பிரித்தானியராட்சியில் மலாயாவில் உத்தியோக வாய்ப்புகளைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணத்தவர் பிரித்தானிய உயரதிகாரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக நடந்துகொண்டனர். அத்துடன் தங்கள் எஜமானர் மீது அளவுகடந்த விசுவாசம் கொண்டவராகவும் காணப்பட்டனர். இந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அடிக்கடி காட்டி வந்தனர். பிரித்தானிய மன்னரின் முடிசூட்டு விழாக்கள் அவற்றின் வெள்ளி விழாக்கள், மன்னர் தொடர்பான மற்றும் முக்கிய நிகழ்ச்சி

களின் போதும் இந்த அபிமானம் காட்டப்பட்டது. 1902 இல் ஏழாவது எட்வேட் மன்னராக முடிசூடியபோது மலாயாவில் நடாத்தப்பட்டவிழாக் களில் யாழ்ப்பாணத்தவர் ஆர்வத்துடன் பங்குபற்றினர். 1911 இலே ஆருவது ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழாவினைப் பெரிய அளவில் கொண்டாடுவதற்கு டாக்டர் ஈ. ரி. மெக்கின்ரயரைத் தலைவராகக் கொண்ட அறுபது யாழ்ப்பாணப் பிரமுகர் குழு நடவடிக்கைகளை மேற் கொண்டது.35 செலாங்கூர் இலங்கைத் தமிழர் சங்கமண்டபத்தில் பிரித் தானிய உயரதிகாரியான சேர். ஆர்தர் யங் தலைமையில் கூட்டம் நடை பெற்றதுடன் அலங்கார வண்டியுடனுன ஊர்வலமும் நடத்தப்பட்டது. மண்டபத்தின் முன்னுல் அலங்கார வளைவுகளும் ஏற்படுத்தப்பட்டன. 1922 இல் வின்ஸர் கோமகன் (Prince of Wales) மலாயா வந்தபோது இலங்கையர் பிரதிநிதிகளாகிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் ஈ. ரி. மெக்கின்ரயர், ஆர். தம்பிப்பிள்ளை ஆகியோர் அவரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.36 மலாயாவில் சிறுதொகையினராகக் காணப் பட்ட யாழ்ப்பாணத்தவர் வின்ஸர் கோமகனைச் சந்திக்குமளவிற்கு இக் காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புடையவர் களாக இருந்தனர். 1937 இல் ஆருவது ஜோர்ஜ் மன்னர் முடிசூடியதன் வெள்ளிவிழாவினை யாழ்ப்பாணத்தவர் வெகு விமரிசையாகக் கொண்டாடி யிருப்பதை அறிய முடிகின்றது. இவ் விழாவில் அலங்கார வண்டிகள் இடம்பெற்றதுடன் கோலாலம்பூரின் முக்கிய பகுதிகளில் அலங்கார வளைவு களும் அமைக்கப்பட்டிருந்தன.37 இவ்வாறே இரண்டாவது எலிஸபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவின்போதும் சிங்கப்பூரில் யாழ்ப்பாணத் தவரால் அலங்கார வளைவுகள் வைக்கப்பட்டு விமரிசையாகக் கொண்டா டப்பட்டது.38 இத்தகைய விழாக்களைக் கொண்டாடியதன்மூலம் யாழ்ப் பாணத்தவர் தாம் பிரித்தானிய ஆட்சியாளரின் ஆதரவாளர்கள், விசு வாசிகள் என்பதனைக் காட்டிக்கொண்டனர்.

இவ்வாறே பிரித்தானிய சாம்ராஜ்யம் உலகப் போர்க் காலங்களில் ஆபத்துக்குள்ளானபோது தம்மால் செய்யக்கூடிய உதவியைச் செய்து தாம் பிரித்தானிய ஆட்சியின்மேல் கொண்டிருந்த பற்றைக் காட்டியுள்ளனர். முதலாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் 1915 இல், யாழ்ப்பாணத் தவரால் பிரித்தானிய முடிக்குத் தம் விசுவாசத்தைத் தெரிவிக்கும் முக மாகப் பிரித்தானியப் போர்க்காரியாலயத்திற்கு விமானம் ஒன்றை வழங் குவதற்கு மலாய தீபகற்பம் முழுவதிலும் பணம்திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.39 இதன் விளைவாக 1915 டிசம்பர் 22 ஆம் திகதி "The Jaffna" என்ற பெயர்கொண்ட யுத்த விமானம் யாழ்ப்பாணத் தவரால் பிரித்தானிய அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.40 1939 இல் இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து செலாங்கூர் இலங்கைத் தமிழர் சங்கம் "Ceylon Tamils Fighter Fund" என்ற பெய ரில் நிதிதிரட்டுவதற்கான யோசனையைத் தெரிவித்து, மலாய் அரசுகளி லும், சிங்கப்பூரிலும் இலங்கைத் தமிழர்களிடையே ஆலோசனைக் கூட்டங் கள் நடைபெற்றன. இறுதியில் 1941 ஒகஸ்ட் 18 ஆம் திகதி 'Spit Fire Fund' என்றபெயரில் நிதிதிரட்டல் ஆரம்பமானது.41 இவ்வாருக பேர ரசுக்கு ஆபத்து ஏற்பட்ட காலங்களில் தம்மால் இயன்றவரையில் உதவி செய்து தம்மாதரவைக் காட்டினர். பிரித்தானிய ஆட்சியாளரும் மலா

யாவில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளின்போது யாழ்ப்பாணத்தவரின் பிரதிநிதிகளை அழைப்பித்து கௌரவப்படுத்தினார். இத்தகைய அழைப்புக்கள் யாழ்ப்பாணத்தவர் பொறுத்துப் பெரும் கௌரவமாகக்கணிக்கப்பட்டன.

*1941* டிசம்பர் 8 ஆம் திகதி மலாயாமீது ஜப்பானிய விமானங்கள் குண்டு வீச்சைத் தொடங்கியதிலிருந்து இரண்டாம் உலக மகாயுத்தத்தின் நேரடி விளைவுகளை அது அனுபவிக்கலாயிற்று. தென்கிழக்காசியாவில் ஜப்பானியரது முன்னேற்றத்தை அறிந்த இந்தியர், யாழ்ப்பாணத்தவரில் குறிப்பிடத்தக்கோர் தங்கள் குடும்பங்களை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அனுப்பியிருந்தனர். பொதுவாக மலாயாவும் அதன் மக்களும் இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் பல்வேறு வகைகளிலும் பாரதூரமான பாதிப்பை அடைந்தனர். பிரித்தானியர் மலாயாவிலிருந்து பின்வாங்கியதையடுத்து ஏற்பட்ட நிர்வாகக் குழப்பங்களினாலும், பொருளாதாரச் சீர்குலைவினாலும் எல்லா இன மக்களும் பாதிக்கப்பட்டனர். இவர்களுள் இந்தியரும் யாழ்ப்பாணத்தவருமே கூடியளவுக்குக் கஷ்டப்பட்டனர். இவர்களுள் அனேகர் மலாயாவுடன் நிரந்தரமான வகையிலே வேரூன்றாதவர்களாக, நிச்சயமில்லாத ஒரு கூலிப் பொருளாதாரத்திலே (Wage economy) தங்கியிருந்தவர்களாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாணத்தவருள் அனேகர் அரசாங்க, தனியார் துறைகளிலே மாதாந்தச் சம்பளத்தைப் பெற்று வாழ்ந்ததால், ஜப்பானியர் கைப்பற்றலின்போது இம்முறை தடைப்பட பெருங் கஷ்டத்துக்குள்ளாகினர். பொதுவாகவே உணவுப்பற்றுக்குறை, சுகாதார, வைத்திய, போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைவு, பெருந்தோட்டத் தொழிற்துறையின் வீழ்ச்சி, பணப்பெறுமதியின்மை, உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பின்மை எல்லாமே ஜப்பானியரது மூன்றரை வருட ஆட்சியின்போது காணப்பட்டன.

ஜப்பானியர் மலாயாவிற்கு வந்ததையும், பிரித்தானிய அரசாங்கம் வீழ்ச்சியுற்றதையும் தொடர்ந்து அனேக யாழ்ப்பாணத்தவர் தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். ஜப்பானியர் கைப்பற்றியதன் பின்பாக தம் இருப்பிடங்களை அடைந்தபோது அவை கொள்ளையடிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். ஜப்பானியர் கைப்பற்றியதன் பின்னர் ஒழுங்கான அரசாங்கமொன்றை நிறுவியபோது யாழ்ப்பாணத்தவர் பண நெருக்கடியினாலே பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் மலாய அரசு பொறுத்து, யாழ்ப்பாணத்தவரின் வேலையின் இன்றியமையாத் தன்மையை அறிந்துகொண்ட ஜப்பானியர், இவர்களுள் அனேகரைப் பழைய வேலைகளில் வைத்துக் கொண்டனர்.42 முக்கியமாகப் புகையிரதப் பகுதி, தபால்த் தந்திப் பகுதிகளிலே கடமையாற்றிய யாழ்ப்பாணத்தவர் திரும்பவும் பழைய தொழில்களையே பெற்றுக் கொண்டனர். பொதுவாக மலாயாவில் பிரித்தானிய நிர்வாகம் செயற்படுவதற்கு இடைத்தரப் பதவிகளை யாழ்ப்பாணத்தவர் வகித்து உதவினார்கள். அதேபோல் ஜப்பானிய நிர்வாகம் செயற்படவும் விரும்பியோ, விரும்பாமலோ உதவினர். புதிய அரசாங்கத்தில் பல்வேறு கொண்டாட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டியவராகினர்.

ஜப்பானியரது குண்டு வீச்சுத்தாக்குதல்களினால் முக்கிய நகரங்களில் இருந்த யாழ்ப்பாணத்தவரது வீடுகள் சில அழிக்கப்பட்டதுடன், அவர்களது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தியுமுள்ளன, அத்துடன் ஜப்பானியரால் ஏற்

படுத்தப்பட்டிருந்த The Kempei Tai என்றழைக்கப்பட்ட நிறுவனத்தின் நடவடிக்கைகள் அநாகரீகமானவையாகவும், கொடூரமானவையாகவும் காணப்பட்டன. இது இரகசியப் பொலீஸ் அமைப்பாகவும் பயத்தின் மூலமும், சித்திரவதையின் மூலமும், அடக்கிவைக்கும் அமைப்பாகவும் காணப்பட்டது.[43] மொட்டைக் கடிதங்களே இத்தகைய சித்திரவதைகளுக்குப் போதுமானவையாக இருந்தன. ஏராளமான மலாயரும், சீனரும் கொடுமையான முறையிலே சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டுத் தங்கள் உயிரையும் உடைமைகளையும் இந்த அமைப்பின்கீழ் இழந்தனர். பிரித்தானியர்மேல் யாழ்ப்பாணத்தவர் கொண்டிருந்த மரபுவழியான அரசு விசுவாசம் ஜப்பானியரிடம் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் வெளிப்படையாகவே யாழ்ப்பாணத்தவரின் பிரித்தானிய விசுவாசத்தைப் பற்றியும் தம்முடன் ஒத்துழைக்காத தன்மை பற்றியும் கூறியுள்ளனர்.[44] மலாயாவிலிருந்த யாழ்ப்பாணத்தவரில் ஒருதொகையினர் பிரித்தானிய அரசுமேல் கொண்ட விசுவாசத்திற்காகக் கடுமையான சித்திரவதைகளுக்கும், இழப்புகளுக்கும், சிறைத்தண்டனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.[45]

மலாயாவில் ஏற்படுத்தப்பட்ட ஜப்பானிய ஆட்சிக்கு எதிராக உருவாக்கப்பட்ட மலாய மக்களின் ஜப்பானியருக்கெதிரான படையின் (Malayan People's Anti Japanese Army–M. P. A. J. A.) திடீர்த் தாக்குதல்களினாலும், ஜப்பானியரின்கீழ் இடைநிலைப் பதவிகளை வகித்த யாழ்ப்பாணத்தவர் இன்னலுற்றனர். இத் திடீர் தாக்குதல்களினால் யாழ்ப்பாணத்தவர் தம்முயிரையே இழந்துமுள்ளனர். அது போலவே ஜப்பானியர் 1945 ஒகஸ்டில் சரணடைவதற்கும் 1945 செப்ரெம்பரில் மலாயாவைப் பிரித்தானியர் திரும்பக் கைப்பற்றுவதற்கும் இடையில் சட்டத்திற்குப் புறம்பான சக்திகளின் தொழிற்பாட்டினால் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புக்கள், இந்தியர், யாழ்ப்பாணத்தவர் மீதும் இடம்பெற்றுள்ளன. பிரித்தானிய இராணுவ நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சட்டத்திற்குப் புறம்பான சக்திகள் அடக்கப்பட்டன.

ஜப்பானியர் மலாயாவைக் கைப்பற்றியிருந்த காலத்தில் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்டிருந்த இந்திய சுதந்திரக் கழகத்துடனான (Indian Independence League) யாழ்ப்பாணத்தவர் தொடர்புபற்றி அறிய முடிகிறது. காலத்திற்குக் காலம் இந்தியாவிலிருந்து வெளியேறிய இந்திய தேசிய தீவிரவாதிகளைப் பயன்படுத்தி ஜப்பானியர் ''பரந்த ஆசியா'' ''Pan Asianism'' என்ற போர்வைக்குள் தங்கள் ஏகாதிபத்திய விருப்பை அடையும் நோக்குடன் காணப்பட்டனர். இவ்வகையில் இந்திய தேசியவாதிகளில் ஒரு பிரிவினரைப் பிரித்தானிய ஆதிக்கத்தைத் தென்கிழக்காசியாவிலிருந்து நீக்குவதற்குப் பயன்படுத்தினர். அவ்வகையில் இந்தியாவிலிருந்து வெளியேறி ஜப்பானில் தங்கியிருந்த ராஷ் பிகாரி போஸ் (Rash Behari Bose) என்ற தீவிரவாதியின் தலைமையில் ஜப்பானியரின் இராணுவ உதவியுடன் இந்திய சுதந்திரத்தைப் பெறுவதற்காக இந்திய சுதந்திரக்கழகம் உருவாக்கப்பட்டது.[46] அவ்வாறே ஜப்பானிடம் சரணடைந்த பிரித்தானிய இந்திய இராணுவத்தை (British Indian Army) மையமாகவைத்து இந்திய தேசிய இராணுவம் (Indian National Army) மேற்படி நோக்கிற்காக உருவாக்கப்பட்டது. ஆனால் இம்முயற்சி 1943 இல் இந்திய சுதந்திரத்தைப்

பெறுவதற்காக அவ் வல்லரசுகளுக்கும் நேச நாடுகளுக்குமிடையிலான போராட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பது காரணமாக இந்திய தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறிய சுபாஸ் சந்திரபோஸ் (Subash Chandra Bose) மலாயாவிற்கு வருவதிலிருந்து புது உத்வேகம் கண்டது.

1943 யூலையில் சிங்கப்பூரை அடைந்ததைத் தொடர்ந்து இந்திய சுதந்திரக் கழகத்தின் தலைமைப் பதவியையும், இந்திய தேசிய இராணுவத்தின் பிரதம தளபதி பதவியையும் சுபாஸ் சந்திரபோஸ் பெற்றுக்கொண்டார். 1943 ஒக்டோபரில் சுதந்திர இந்தியாவின் மாற்று அரசாங்கம் (Provisional Government - Azad Hind) பிரகடனப்படுத்தப்பட்டு அதன் பிரதமரானார். இவ்வரசாங்கம் பிரித்தானியாவுடனும், ஐக்கிய அமெரிக்காவுடனும் போர்ப் பிரகடனங்களைச் செய்ததுடன் ஜப்பான், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஆறு நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்டது.47 சுபாஸ் சந்திரபோஸ் இந்திய சுதந்திரக் கழகத்தின் தலைமைப் பதவியைப் பெற்றதுடன் இக்கழகம் புனரமைக்கப்பட்டு மலாயாவின் பலபாகங்களிலும் கிளைகள் தாபிக்கப்பட்டிருந்தன. பிரதான நகரங்களில் அமைக்கப்பட்ட கிளைகளில் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளையும் சாதாரண அங்கத்துவத்தையும் யாழ்ப்பாணத்தவரில் குறிப்பிடத்தக்கோர் பெற்றுள்ளனர்.48 இந்திய விடுதலைக்கான பெண்கள் இயக்கத்திலும் யாழ்ப்பாணத்துப் பெண்கள் முக்கிய பங்கு வகித்திருப்பதை அறிய முடிகின்றது.49 இந்திய சுதந்திரக் கழகத்தின் ஆரம்ப நாட்களில் இந்தியருடன் யாழ்ப்பாணத்தவரும் உள்ளடக்கப்பட்டாலும் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தவரின் கோரிக்கையினால் இவர்களுக்கான தனியான இந்திய சுதந்திரக் கழகங்கள் தாபிக்கப்பட்டன. மலாயாவின் பல பகுதிகளிலுமிருந்த முக்கிய யாழ்ப்பாணத்துப் பிரமுகர் பலர் முக்கிய பதவிகளை இக்கழகத்தில் பெற்றிருந்தனர்.50 இந்திய தேசிய இராணுவம் குறைந்தளவு ஆதரவையே யாழ்ப்பாணத்தவரிடமிருந்து பெற்றுக்கொண்டது. இந்திய சுதந்திரக் கழகம் ஜப்பானியர் ஆட்சியில் ஆற்றிய பெறுமதி மிக்க ஒரு சேவை பற்றியும் கழகத்தில் இவர்களது ஈடுபாடுபற்றியும் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது. "The Independence League however performed a valuable function. Protected the Indians and Ceylonese from indiscriminate persecution and the Ceylonese section through its office - bearers was able to protect or warn Ceylonese of imminent trouble. The interest of the Ceylonese, however in the movement was lukeworm and a general estimate could safely say that they derived more good in the way of personal protection and did little or no harm to British cause to which they were consistently loyal".51

மலாயாவைப் பிரித்தானியர் மீண்டும் கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்திய சுதந்திரக் கழகத்தின் கிளைகளில் பதவி வகித்த நூற்றுக்கணக்கான இந்தியர், யாழ்ப்பாணத்தவர்மீது கழகத்திற்கு வலிந்து பணம் வசூலித்தமை சம்பந்தமாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் 1945 டிசம்பர் 23 இல் Kuantan என்ற இடத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அத்துடன் Azad Hind அரசாங்கத்தின் உத்தரவுகளை வேறு வழியின்றியே ஏற்று நடந்தனர் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.52

திரும்பவும் பிரித்தானியர் மலாயாவைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து மலாயாவில் வசித்த மக்கள் போரின் முன்பாகக் காணப்பட்டவாறே உணவுப் பொருட்களின் விலைகள் குறையுமென்று எதிர்பார்த்தனர். ஆனால் விலைகளோ முன்பு காணப்பட்டதிலும் பார்க்க எட்டிலிருந்து பத்து மடங்கு வரையில் அதிகமானவையாகக் காணப்பட்டன. இதனால் எல்லா இனத்தவருமே பெரிதும் கஷ்டப்பட்டனர். யாழ்ப்பாணத்தவரில் அதிகமானோர் அரசாங்கப்பதவிகளை வகித்திருந்தமையால் அரசாங்கம் முற்பணமாக வழங்கிய மூன்று மாதச்சம்பளம், அல்லது 250க்கு மேற்படாத மலாய டொலர் இப்பொருளாதார நெருக்கடியின்போது பெரிதும் உதவியது.[53] அத்துடன், இது மீண்டும் தொழில் பெறுவர் என்ற நம்பிக்கையையும் கொடுத்ததுடன், ஜப்பானியர் ஆட்சிக் காலமாகிய 44 மாதங்களின் சம்பள அதிகரிப்பும் கிடைக்குமென்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. ஆனால் வர்த்தக, பெருந்தோட்டத்துறைகளில் ஈடுபட்டிருந்தோர் மிகவும் கஷ்டநிலைக்காளானார்கள். அவர்களைப் பொறுத்துச் சம்பள முற்பணமோ தொழிலுக்கான உடனடியான வாய்ப்புக்களோ கிடைக்காமல் இருந்தன. அவர்களிடமிருந்த ஜப்பானிய பணம் செல்லாததாக்கப்பட்டது. இக்காலத்தில் மற்றவர்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாணத்தவர் அனுபவித்த பொருளாதாரக் கஷ்டம் குறைவானதாகக் காணப்பட்டதெனலாம்.

மலாயாவில் இலங்கையரினால் கலாசார, மத அடிப்படையிலான பல்வேறு சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் அரசியற் துறையிலே ஆர்வம் கொண்ட சங்கமாக 1945 இல் முதன்முறையாக Ceylon Federation of Malaya தாபிக்கப்பட்டது.[54] இச் சங்கத்தின் முதற் தலைவராகக் கோலாலம்பூரில் பிரபல்யம் பெற்ற வக்கிலாக விளங்கிய ஈ. ஈ. சி. துரைசிங்கம் காணப்பட்டார். இச்சங்கம் இக் காலமளவில் வாழ்ந்த ஏறத்தாழ 25,000 இலங்கையரிடையே பரவலான செல்வாக்கைப் பெற்றிருந்தது, பொதுப்பட இலங்கையர் எனக் குறிப்பிட்டாலும் பெரும்பாலானவர் யாழ்ப்பாணத்தவராகவே காணப்பட்டனர். இலங்கையருள் சிறு பகுதியினராகக் காணப்பட்ட சிங்களவர் 'மலாய சிங்களவர் சங்கம்' என்ற பெயரில் தம் கருத்தை வெளிப்படுத்த உருவாக்கியிருந்தாலும், இலங்கையர் சம்பந்தமான பொது விடயங்களில் இவையிரண்டும் ஒன்று சேர்ந்தியங்கின என அறிய முடிகின்றது.[55] மலாய இந்திய காங்கிரசில் இணை அங்கத்துவ உரிமையே இலங்கையருக்கு வழங்கப்பட்டதால் மிகக் குறைந்த இலங்கையரே இவ்வங்கத்துவத்தைப் பெற்றிருந்தனர். அரசியல் நடவடிக்கைகள் வலுவடையவே இலங்கையர் இனவேறுபாடற்ற அரசியல் கட்சிகளுடன் இணைந்துகொண்டனர்.

மலாயன் யூனியன் முறை கைவிடப்பட்டு மலாயக் கூட்டாட்சி அமைப்பு முறை ஆலோசனையிலிருந்த காலத்தில் இலங்கையர் தீவிர எதிர்ப்பையோ, அல்லது தீவிர ஆதரவையோ காட்டாதிருந்தனர். அனேக இலங்கையர் அரசாங்க சேவையில் இருந்ததுடன் போருக்கு முன்பாகக் காணப்பட்ட நிர்வாக ஒழுங்கு முறைகளைப் பேண வேண்டுமென்று விரும்பிய மலாயருடன் ஒத்த கருத்துடையவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் Ceylon Federation க்கும் புதிய அரசியலமைப்பை வரைவதற்கு அமைக்கப்பட்ட குழுவுக்கும் இடையே இலங்கையருக்கான விஷேட தொகுதி ஒதுக்கல் என்ற விடயம் சம்பந்தமாகக் கருத்துவேறுபாடு காணப்

பட்டது.56 ஆனால் இறுதியாகச் செய்யப்பட்ட கூட்டாட்சி ஒப்பந்தத்திலே இலங்கையருக்கான விஷேட தொகுதி ஒதுக்கப்பட்டு ஈ. ஈ. சி. துரைசிங்கம் நியமனம் பெற்றார். இவர் கூட்டாட்சி அமைப்பில் உருவாக்கப்பட்ட சட்டநிரூபண சபையில் அதிக செல்வாக்குள்ள அங்கத்தவருள் ஒருவராக விளங்கினார். இலங்கையர் என்று குறிப்பிட்டாலும் இக்காலப் பகுதியில் மலாயாவில் வாழ்ந்த இலங்கையருள் 80 சதவீதத்திற்கு அதிகமானோர் யாழ்ப்பாணத்தவரே என்பது இங்கு கவனிக்கத்தக்கது. மலாயக் கூட்டாட்சி ஏற்படுத்தப்பட்டதன் பின்பாக அரசாங்கத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்ட பழமைபேணும் மலாயர்களுடன் யாழ்ப்பாணத்தவர் நெருங்கிய அரசியல் கூட்டிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். பிரித்தானியர் ஆட்சியிலிருக்கும் பொழுது எவ்வகையில் அவர்களுக்கு ஆதரவை அளித்து வந்தார்களோ அவ்வகையில் புதிய ஆட்சியாளருடன் இணைந்து அவர் தனிமுதன்மையை ஏற்று நடக்க வேண்டியவராயினர். இதனை 1956 இல் மலாயக் கூட்டாட்சியில் உள்ள இலங்கையர் அரசியல் அமைப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்த விண்ணப்பத்தில் மிகத்தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.57

மலாயாவில் இலங்கையரின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி ஆசிரியர் மீன்ஸ் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளத்தக்கதாகும்.

"The Ceylonese were less nationalistic than the Indian and more moderate in their criticism of the British. As a very small minority they looked to the stability and justice of British rule for protection of their interests and they were less inclined to stress the principles of unbridled majority rule. They feared that they might be overwhelmed by the larger Communities in Malaya, particularly if the latter were motivated by extreme nationalism"58

மலாயாவில் யாழ்ப்பாணத்தவரின் அரசியல் நடவடிக்கைகளில் பல காரணிகள் செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. யாழ்ப்பாணத்தவர் சிறிய தொகையினராகக் காணப்பட்டமை, மலாயாவைத் தம் உழைக்கும் இடமாகக் கருதியமை, அதனால் பிரித்தானிய ஆட்சிக்கு ஆதரவையும், விசுவாசத்தையும் காட்டியமை, இலங்கையையே தம் தாய் நாடாகக் கருதியமை, மலாயர் பொறுத்து இவர்கள் ஆரம்பத்தில் கொண்ட மனப்பான்மை, மலாயர் அரசியலதிகாரம் பெற்றபோது அவர்களுடன் உறவு, இவை எல்லாவற்றினாலும் பாதிக்கப்பட்டதாகவே மலாயாவில் யாழ்ப்பாணத்தவரின் அரசியல் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. ஜப்பானியரால் மலாயா கைப்பற்றப்பட்டபொழுது அவர்களுடன் இணைந்து நடக்க வேண்டியவராகினர். அத்துடன் இக்காலத்தில் மலாயாவில் ஏற்படுத்தப்பட்ட இந்திய சுதந்திரக் கழகத்துடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். பிரித்தானியரிடமிருந்து 1957 ஆகஸ்ட் 31 ஆம் திகதி மலாயா சுதந்திரம் பெற்றதையும் யாழ்ப்பாணத்தவர் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். பிரித்தானியரிடமிருந்து மலாயரின் கைக்குள் அரசியலதிகாரம் சென்றபோது அவர்களுடன் இணைந்து படிப்படியாக மலாயாவின் தேசிய வாழ்வில் கலந்து கொண்டனர்.

## அடிக்குறிப்புகள்

1. Arasaratnam, S., **Indians in Malaysia and Singapore**, London: Oxford University Press, 1970. p. 85.
2. **Ibid.**, p. 86.
3. **Morning Star**, October 23, 1931.
4. **F. M. S. Proceedings of the Federal Council 1928 B 2.** Arasaratnam, **op. cit.**, p. 86.
5. The Indian. Vol. II No. 4, July 1926 (Editorial) Arasaratnam **op. cit.**, p. 87.
6. Srinivasa Sastri, V. S., **Report on the conditions of Indian Labour in Malaya.** Kuala Lumpur: 1937.
7. **Salangor Ceylon Tamils Association, Platinum Jubilee Souvenir,** Kuala Lumpur: 1972. p. 80.
8. Report of Brigadier General Sir Samuel Wilson — on his visit to Malaya 1932, Cmd. 4276, p. 26. Arasaratnam, **op. cit.**, p. 89.
9. Memorandum submitted to Sir Samuel Herbert Wilson 1932, on behalf of the Ceylonese community of Selangor. Durairajasingam S., **A Hundred years of Ceylonese in Malaya and Singapore 1867 – 1967** Kuala Lumpur, n. d. (1968?) p. 326.
10. Report of Brigadier General Sir Samuel Wilson — on his visit to Malaya 1932 Cmd. 4276, p. 26. Arasaratnam, **op. cit.,** p. 90.
11. **F. M. S. Proceedings of the Federal Council 1934** B 104. Arasaratnam, **op. cit.** 90.
12. **F. M. S. Proceedings of the Federal Council 1936** B 14. Arasaratnam, **op. cit.**, p. 90.
13. **F. M. S. Proceedings of the Federal Council 1936** B 18. Arasaratnam, **op. cit.**, p. 91.
14. **The Ceylon Spectator** March 25, 1936, pp. 81 - 82.
15. **Morning Star**, July 26, 1929
16. **Ibid.**
17. Arasaratnam **op. cit.**, p. 116,
18. **Ibid** . p. 118.
19. **Ibid.**, p. 122.
20. **S. C. T. A. Platinum Jubilee Souvenir 1972** p. 81.
21. **Ibid.**, p. 81.
22. வட்டுக்கோட்டை மேற்கில் வசிக்கும் மலாயன் பென்சனரான அம்பலவாணர் சிவசம்பு என்பவருடன் ஆசிரியர் மேற்கொண்ட நேர்முக விசாரணையின்போது பெறப்பட்டது.
23. **Malayan Ceylonese Association – Silver Jubilee Number 1962,** Jaffna: pp. 44 - 45-
24. **Ceylon Administration Report, 1932.** Part I, D 4.
25. **Morning Star**, July 26, 1929.

26. **Ceylon Sessional Paper IX,** 1946, Colombo. Ceylon Govt. Press, Para. 5.
27. **Morning Star** March 5, 1903.
28. **Ibid.,** November 15, 1911, December, 23, 1911.
29. **Ibid.,** September 4, 1920.
30. **Hindu Organ** April 24, 1924.
31. **Ibid.,** March 15, 1940.
32. **Ceylon Tamils Association Singapore 1909 – 1959** Golden **Jubilee Souvenir,** Singapore: 1959, p. 13.
33. **Ibid.,** March 3, 1927.
32. **Morning Star** September 22, 1933.
33. Coomaraswamy, **Report of the general and economic conditions of the Ceylonese in Malaya** (Ceylon Sessional Paper IX 1946.)
34. **Morning Star,** August 8, 1947.
35. **Ibid.,** June 28, 1911.
36. Durairajasingam **op. cit.,** p. 123.
37. **Ibid.,** pp. 35, 97.
38. **Ibid.,** p. 121.
39. Morning Star, September 1, 1915.
40. Durairajasingam **op. cit.,** pp. 102 – 103.
41. **S C. T. A. Platinum Jubilee Souvenir 1972.** p. 80.
42. **Ceylon Sessional Paper IX 1946,** Para 9.
43. **Ibid.,** Para. 11.
44. **Ibid**
45. நேர்முக விசாரணைகளின்போது அறியப்பட்டது.
46. Arasaratnam, **op. cit.,** pp. 104 – 105.
47. **Ibid.,** p. 105.
48. **Malayan Ceylonese Association — Silver Jubilee Number 1962** Jaffna: pp. 55, 65, 67-
49. ஆசிரியர் மேற்கொண்ட நேர்முக விசாரணைகளின்போது பெறப்பட்டது.
50. **Ceylon Sessional Paper IX,** 1946 Para. 20.
51. **Ibid.,** Para. 10.
52. **S. C. T. A. Platinum Jubilee Souvenir 1972** p. 81.
53. **Ceylon Sessional Paper IX 1946** Para. 20.
54. **Ceylon Federation of Malaya, Silver Jubilee Celebration Souvenir** July 1975, Kuala Lumpur p. 1.
55. Means, Gorden P., **Malaysian Politics** 2nd. ed., Singapore, Hodder and Stoughton Ltd., 1976, p. 110.
56. **Ibid.,** p. 110.
57. Reid Commission Memorandum — 1956, on behalf of the Ceylonese in the Federation of Malaya, Durairajasingam **op. cit.,** p. 328.
58. Means **op. cit.,** P. 110.

---